# தெகியத்தகண்டி பிரதேச சபை

## அம்பாறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 16 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மே 10 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய தெகியத்தக்கண்டி பிரதேச சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய தெகியத்தக்கண்டி பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளின் பொழிப்பு கீழே தரப்படுகின்றன.

| | | விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| (அ) | நிதிக் கூற்றுக்களில் விடுபாடுகள் | 03 | 6,300 |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களில் அதிகரித்துக்காட்டல்கள் | 01 | 22,240 |
| (இ) | நிதிக் கூற்றுக்களில் குறைத்துக்காட்டல்கள் | 01 | 81,450 |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களின்படி 3 கணக்கு விடயங்களின் மீதிகள் ரூபா 1,753,865 ஆன அதேநேரம் துணைப்பதிவேடுகளின்படி, அந்த மீதிகள் ரூபா 1,820,138 ஆகும், ஆதலால் ரூபா 66,273 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 16,749,469 பெறுமதியான ஐந்து கணக்கு விடயங்கள் வேண்டப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்யமுடியவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2006 இன் 10 ஆம் உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 153 ஆம் பிரிவு | மாதம் ஒன்றிற்கு ரூபா 50,000 அல்லது வருடம் ஒன்றிற்கு ரூபா 500,000 ஐ விஞ்சிய சேவைகள் மற்றும் வழங்கல்கள் மீதான குறித்த கட்டணங்களில் 5 சதவீத பிடித்து வைத்தல் வரி அறவிடப்பட்டு அடுத்துவரும் மாதம் 15 அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்க வேண்டிய போதிலும் ரூபா 1,109,134 தொகையான குறித்த கட்டணங்களில் |

| | |
|---|---|
| | அறவிடவேண்டிய ரூபா 55,516 தொகையான பிடித்துவைத்தல் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் 1988 | |
| விதி 180 | காசு மற்றும் களஞ்சியங்களுக்குப் பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் மற்றும் வருமான சேகரிப்பு தொடர்பான கடமைகளில் பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் காசு அல்லது அசையாத சொத்துக்கள் அல்லது காப்புறுதிக் கொள்கைகள் என்பன பிணைவைப்பாக சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் சபையின் உத்தியோகத்தர்கள் அதன்படி நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (இ) 2007 பெப்ரவரி 26 ஆந் திகதிய 424 ஆம் இலக்க மற்றும் 2010 செப்டெம்பர் 01 ஆந்திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைகள் | தலைவர் மற்றும் உப தலைவரின் கையடக்கத் தொலைபேசிகளிற்கான முற்செலுத்திய கட்டண அட்டைகளிற்காக சபை நிதிகளில் முறையே ரூபா 42,000 மற்றும் 36,000 ஆன தொகைகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த தொலைபேசிகள் அவர்களிற்கு உடமையானதெனவும் அவர்களுடைய தொலைபேசிகளிற்காக மாத்திரமே அந்த அட்டைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன எனவும் குறிப்பிடுவதற்கு சான்றுகள் இருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகை ரூபா

485,914 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 520,439 ஆக இருந்தது.

## 2.2. வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் நிலுவை வருவாய்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருவாய் , உள்ளபடியான வருவாய் மற்றும் நிலுவை வருவாய் என்பவற்றின் தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருவாய் விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ள படியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய நிலுவை | மதிப்பிடப் பட்டது | உள்ள படியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (அ) | இறைகளும் வரிகளும் | 776 | 690 | 374 | 780 | 418 | 319 |
| (ஆ) | குத்தகை வாடகைகள் | 2,532 | 2,422 | 03 | 2,342 | 2,113 | 151 |
| (இ) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 962 | 959 | 80 | 1,000 | 895 | 82 |
| (ஈ) | ஏனைய வருமானம் | 7,406 | 7,499 | 189 | 6,906 | 6,169 | 299 |

### 2.2.2 நீதி மன்றத் தண்டப்பணம்

2010 திசெம்பர் 31 வரை பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் ஒரு நீதவான் நீதி மன்றத்தால் அறவிடப்பட்ட ரூபா 76,166 தொகையான நீதி மன்ற தண்டப்பணம் சபையால் பெறவேண்டியவையாக இருந்தது.

### 2.2.3 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

(அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகளின் 59 ஆம் விதியின்படி மீளாய்வாண்டின் போது சபையின் அதிகார எல்லையில் அளவை நடாத்துவதற்கும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின்படி அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகளின் 67 ஆம் விதியின்படி மீளாய்வாண்டின் போது அளவை நடாத்திய பின்னர் தயாரிக்கப்பட்ட வியாபார இடங்களின் அதிகரிப்பு அல்லது வீழ்ச்சி அல்லது அத்தகைய வருடாந்த அறிக்கை குறிப்பிடுகின்ற வியாபார இடங்களைக் காட்டுகின்ற பதிவேடுகள்கிடைக்காமையால் வியாபார இடங்களின் கட்டணங்களின் அறவீடு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வரிகள்

சுகாதாரத் திணைக்களம் மற்றும் கல்வித் திணைக்களத்திலிருந்து 1 ஆண்டிற்கு மேல் பெறவேண்டியவையாக இருக்கின்ற ரூபா 133,631 தொகையான வரி நிலுவைகளை அறவிடுவதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் முரண்களுடன் சேர்த்து கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | பாதிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் | பாதிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் | 7,525 | 5,936 | 1,589 | 7,128 | 5,453 | 1,675 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏனையவை | 4,598 | 5,148 | (550) | 3,586 | 3,125 | 461 |
| உப மொத்தம் | 12,123 | 11,084 | 1,039 | 10,714 | 8,578 | 2,136 |
| மூலதனச் செலவினம் | 3,100 | 3,152 | (52) | 151 | 20,019 | (19,868) |
| நிகர மொத்தம் | 15,223 | 14,236 | 987 | 10,865 | 28,597 | (17,732) |

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியின் தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | ஊழியர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|---|
| (i) | நிறைவேற்றுத் தரங்கள் | 01 | 01 |
| (ii) | துணைநிலைத் தரங்கள் | 12 | 09 |
| (iii) | ஆரம்ப தரங்கள் | 15 | 13 |
| (iv) | ஏனையவை (அமைய, சமயாசமய, தற்காலிக) | - | 06 |
| | | 28 | 29 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்படுத்தப்படாத பௌதீக வளங்கள்

சபைக்குச் சொந்தமான ரூபா 225,000 பெறுமதியான 37 ஸ்ரீ 1327 ஆம் இலக்க ரக்டர் 2004 யூன் 08 இலிருந்து பயனற்றிருந்தது.

### 2.5.2 அறவிடவேண்டிய கணக்குகள்

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6 ஆண்டுகள் முதல் 18 ஆண்டுகள் வரையான வீச்சில் பெறவேண்டிய 6 கடன்களின் தொகை ரூபா 99,439 ஆனதுடன் 1 ஆண்டிற்கு மேலான வேலைகள் கடன்பட்டோர் ரூபா 1,254,269 ஆக இருந்தது.

(ஆ) 1998 இலிருந்து இருக்கின்ற ரூபா 25,000 தொகையான முற்கொடுப்பனவுகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 132(ஓ) ஆம் பிரிவின்படி விடயத்திற்கு பிரதான அமைச்சரின் அங்கீகாரம் இல்லாமல் கேளிக்கைகளில் சபை நிதிகளில் குறித்த எல்லையை விஞ்சி ரூபா 16,862 தொகையான செலவினம் ஏற்பட்டிருந்தது.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) மோட்டார் வாகனப் பாவனை
(ஊ) களஞ்சியக் கட்டுப்பாடு